### இரு கண்களிலும்

# கண்புரை பாதித்த சிறுவனுக்கு அறுவை சிகிச்சை - மீண்டும் பார்வை!

## தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சாதனை!



தேனி, மே 10-

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரு கண்களிலும் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த 12 வயது சிறுவனுக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, மீண்டும் முழுமையான பார்வை வழங்கப்பட்டுள்ளது.

தேனியைச் சேர்ந்த 12 வயது சிறுவன் மணிகண்டன், கண் பார்வை குறைபாடு காரணமாக தனது தாயார் மகாலட்சுமியுடன் அரசு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவிற்கு வந்திருந்தார். சிறுவனைப் பரிசோதனை செய்ததில், அவனது இரு கண்களிலும் 'வளர்ச்சிதை கண்புரை' (Developmental Cataract) பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் முத்து சித்ரா அறிவுறுத்தலின்படி, கண் அறுவை சிகிச்சை பிரிவு பேராசிரியர் டாக்டர் கணபதி ராஜேஷ் தலைமையிலான மருத்துவர்கள் விஜய் ஆண்டனி, சராயு வெங்கடலெஷ்மி, ஜெசிந்தா நான்சி மற்றும் மயக்கவியல் துறை பேராசிரியர் டாக்டர் கண்ணன் பாபு தலைமையிலான மருத்துவர்கள் ஜேசுதாஸ், காருண்யா ஆகியோர் அடங்கிய குழுவினர் தீவிர சிகிச்சை மேற்கொண்டனர்.

சிறுவனுக்கு கடந்த ஏப்ரல் 29ம் தேதி வலது கண்ணிலும், மே 7ம் தேதி இடது கண்ணிலும் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சைக்குப் பின் சிறுவன் மணிகண்டன் தற்போது முழுமையான கண் பார்வையைப் பெற்றுள்ளார்.

இது குறித்து மருத்துவமனை முதல்வர் முத்து சித்ரா மற்றும் கண் அறுவை சிகிச்சை பிரிவு பேராசிரியர் டாக்டர் கணபதி ராஜேஷ் ஆகியோர் தெரிவிக்கையில், குழந்தைப் பருவத்தில் ஏற்படும் கண்புரை பாதிப்பு என்பது தடுக்கக்கூடிய பார்வை இழப்பிற்கான முக்கிய காரணமாகும். ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்தால் பார்வையை முழுமையாகப் பாதுகாக்க முடியும். கண்களில் வெள்ளை நிற பிரதிபலிப்பு,பொருட்களைத் தெளிவாகப் பார்க்க சிரமப்படுவது.

அடிக்கடி கண் சிமிட்டுதல் அல்லது தலையைச் சாய்த்துப் பார்த்தல்.

படிப்பில் கவனக்குறைவு. வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் கண்கள் கூசுதல் அல்லது நீர் வடிதல்.

இப்படியான அறிகுறிகள் இருந்தால் பெற்றோர்கள் தாமதிக்காமல் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து வர வேண்டும். தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இப்பாதிப்பிற்கு நவீன முறையில் இலவசமாக அறுவை சிகிச்சை வழங்கப்படுகிறது," எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாகப்பட்டினம் - தமிழ்நாடு

# மீன்வளப் பல்கலைக்கழக இளநிலைப் பட்டப்படிப்பு சேர்க்கை!

## இணைய வழியில் 15.5.2026 முதல் விண்ணப்பிக்கலாம்!

நாகை, மே 10-

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் (TNJFU) மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள், இவ்வருட (2026-27) இளநிலைப் பட்டப்படிப்பு சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்ப பதிவு 15.05.2026 முதல் தொடங்கும் என்று அறிவித்துள்ளார். பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 10 உறுப்பு கல்லூரிகள் மற்றும் 1 இணைப்பு தனியார் கல்லூரி மூலம் மொத்தம் 8 இளநிலைப் படிப்புகள் (5 தொழில்முறை மற்றும் 3 அறுவைத் தொழில்முறை படிப்புகள்) பல்கலைக்கழகத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

மேலும், இக்கல்வியாண்டில் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 416 மாணவர்களும், இணைப்பு தனியார் கல்லூரியில் 60 மாணவர்களும் சேர்க்கப்பட உள்ளனர். இதில் பல்வேறு ஒதுக்கீடுகள் [ICAR ஒதுக்கீடு 18 இடங்கள், சிறந்த விளையாட்டு வீரர்கள் - 4 இடங்கள், முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுகள் - 4 இடங்கள், திருநங்கை/திருநம்பி 8 இடங்கள், மாற்றுத்திறனாளிகள் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5%), அரசு பள்ளியில் பயின்ற மாணவர்கள் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 7.5%), தொழிற்கல்விப் பிரிவு மாணவர்கள் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5%)] மற்றும் இதர பிரிவுகள் [அந்தமான் & நிக்கோபார் தீவுகள் - 7 இடங்கள் (B.F.Sc.- 2 & B.Tech.- 5), மீனவர் சமூக வாரிசுகள் - 25 இடங்கள் (5% & 15%), வெளிநாட்டு இந்தியர்கள் (NRI) 14 இடங்கள், வெளிநாட்டவர்கள் - 5 இடங்கள், காஷ்மீர் இடம்பெயர்ந்தோர் - 2 இடங்கள் [B.F.Sc. மற்றும் B.Tech. (Fisheries Engineering) தலா ஒன்று], இலங்கைத் தமிழ் அகதிகள் - B.F.Sc. 2 இடங்கள் மற்றும் B.F.Sc. சுய நிதி இடங்கள் - 20] அடங்கும்.

மீனவர் சமூக ஒதுக்கீட்டின் கீழ் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5%) சேர்க்கை பெறும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB) ஏற்கும். ஆகவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர் சமூக மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் சேரலாம். சிறப்பு பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்கள், இணையவழி விண்ணப்பத்தை நிரப்பும் போது தேவையான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இளநிலைப் படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் விளக்கக் கையேடு (Prospectus) ஆகியவற்றை 15.05.2026 முதல் பல்கலைக்கழக இணையதளமான www.admission.tnjfu.ac.in இல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க கடைசி நாள் 14.06.2026 மாலை 05.00 மணி வரை ஆகும். விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்ப வேண்டாம் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. விண்ணப்பக் கட்டணம் SC / SCA / ST மாணவர்களுக்கு ரூ.250/- மற்றும் பிற பிரிவினருக்கு ரூ.500/- ஆகும்.

மேல்நிலைத் தேர்வில் (HSC) பெற்ற கட்-ஆஃப் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். கலந்தாய்வு (Counselling) இணையவழியில் நடைபெறும். ஆனால், சிறப்பு பிரிவின்கீழ் விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கான கலந்தாய்வு நேரடியாக நடைபெறும்; அதன் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று துணைவேந்தர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் தகவலுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தொடர்ந்து பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# புலம்பெயர்வு மேலாண்மையில் முழுமையான அணுகுமுறை கடைப்பிடிப்பு!

## ஐ.நா.வில் இந்தியா தகவல்!

புதுடெல்லி, மே 10-

'புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது' என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

'புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது' என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. சபை அலுவலகத்தில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச புலம்பெயர்வு மறுஆய்வு மன்றத்தின் அமர்வில் பங்கேற்றுப் பேசியபோது இக் கருத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:

இந்தியர்களின் புலம்பெயர்வு வரலாறு பரந்த, ஆற்றல் மிக்கதாகும். உலகம் முழுவதும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் 3.4 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் புலம்பெயர்ந்து, பல நூற்றாண்டுகளாக பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் மட்டுமன்றி கருத்துகளை இணைக்கும் பாலமாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர்கள் சொந்த நாட்டுக்குப் பணம் அனுப்புவது, முதலீடுகள் மற்றும் அறிவுசார் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, அவர்கள் புலம்பெயர்ந்துள்ள நாட்டின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

இத்தகைய சூழலில், புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது.

வலுவான ஆள் கடத்தல் தடுப்பு சட்டங்கள் அவசியம்:

இடப்பெயர்வு என்பது மக்கள் மற்றும் அவர்களின் விருப்பங்கள், மீள்திறன், பங்களிப்புகள் தொடர்புடையது ஆகும்.

சட்டவிரோத இடப்பெயர்வு, ஆள்கடத்தல், சமூக பாதுகாப்பில் உள்ள இடைவெளிகள் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளையில் அனைவரையும் உள்ளடக்கிய, மனிதாபிமான, எதிர்காலத்துக்கு உகந்த ஒரு கட்டமைப்பை உருவாக்க இந்தியா முயற்சித்து வருகிறது. அகதிகள் விவகாரத்தை புலம்பெயர்ந்தோரை பாதுகாத்தல், இடம்பெயர்வு செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்தையும் மேற்பார்வையிடுதல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு முழுமையான மற்றும் நடைமுறைக்கு உகந்த கட்டமைப்பு மூலம் இந்தியா நிர்வகிக்கிறது என்றார்.

மேலும், பல்வேறு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களின் நலனுக்காக இந்தியா அறிமுகப்படுத்தியுள்ள 'இமைக்ரேட்' வலைதளம் குறித்தும் அந்த நிகழ்ச்சியில் கீர்த்தி வர்தன் சிங் விவரித்தார். இந்த வலைதளம் மூலம் பதிவு செய்த மற்றும் மோசடி பட்டியலில் வைக்கப்பட்டுள்ள வெளிநாடு வேலைவாய்ப்பு முகவர்களின் விவரங்கள், தனது விண்ணப்பத்தின் நிலை உள்ளிட்ட பல்வேறு விவரங்களை புலம்பெயர்வோர் தெரிந்துகொள்ள முடியும் என்பதோடு, தங்களின் புகார்களையும் பதிவு செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

### முன்னாள் எம்.எல்.ஏ. வி.முத்துவின் துணைவியார்

# மு.பொன்னம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நாமக்கல், மே 10-

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட துணைச் செயலாளரும், முன்னாள் சங்ககிரி சட்டமன்ற உறுப்பினருமான வி.முத்துவின் துணைவியார் மு.பொன்னம்மாள் அவர்கள் உடல்நலக் குறைவால் கடந்த 08.05.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மு.பொன்னம்மாள் அவர்கள், முன்னாள் நாமக்கல் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் எம். செல்வராஜின் தாயாரும், நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளருமான எஸ். கார்த்தி கேயனின் பாட்டியுமாவார்.

அவரது மறைவுச் செய்தி அறிந்து, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### முன்னாள் எம்.எல்.ஏ. முத்துவின் துணைவியார்

## மு.பொன்னம்மாள் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 10–

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட துணைச் செயலாளர், ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளர், முன்னாள் சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் வி.முத்துவின் துணைவியாரும் மற்றும் முன்னாள் நாமக்கல் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் எம்.செல்வராஜின் தாயாரும் நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கார்த்திகேயனின் பாட்டியுமான மு.பொன்னம்மாள் அவர்கள் 08.05.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

### பென்னாகரம் – நாகமரை கிராமத்தில்

# காவிரி ஆற்றங்கரையின் அழகை ரசிக்க காட்சி முனை அமைப்பு!

## சுற்றுலாத் துறை ஏற்பாடு – மாவட்ட ஆட்சியர் ஆய்வு!

தருமபுரி, மே 10-

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், நாகமரை கிராமத்தில், சுற்றுலா துறையின் சார்பில் காவிரி ஆற்றங்கரையின் அழகை ரசிக்க சுற்றுலாப் பயணிகளுக்காக ரூ.109.00 இலட்சம் மதிப்பீட்டில் காட்சி முனை (View Point) அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், நேற்று (09.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், நாகமரை கிராமம், காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒரு அழகிய கிராமம். மேட்டூர் அணைக்குப் பின்னால் அமைந்துள்ள இந்தக் கிராமத்தின் இயற்கை அழகை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இப்பகுதியில் சுற்றுலாத் துறையின் சார்பில் சுற்றுலாப் பயணிகளுக்காக காட்சி முனை (View Point) அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காட்சி முனையினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், சுஞ்சல்நத்தம் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.2.15 இலட்சம் மதிப்பீட்டில் மாபெரும் மரக்கன்றுகள் நட்டு வைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் திரு. ரெ.சதீஸ், இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் உள்ள நுழைவு வாயில், பார்வையாளர் மாடம், டிக்கெட் கவுண்டர், பரிசல் நிறுத்துமிடம், பரிசல் சென்றடையும் பகுதி, மசாஜ் பகுதி, ஆழ்துளைக்கிணறு, உணவகம், சொகுசு நடைபாதை, எண்ணெய் கழிவு சுத்திகரிப்பு நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட சுற்றுலா அலுவலர் திருமதி.எம்.சங்கீதா, பென்னாகரம் வட்டாட்சியர் ஆறுமுகம், ஏரியூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமரேசன், திருமதி.ரேணுகா, பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லோகநாதன், ஜோதிகணேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நாகை - இலங்கை பயணிகள் கப்பல் நடுக்கடலில்

# பழுதாகி நின்றதால் தவித்த 141 பயணிகள் பத்திரமாக மீட்பு!

நாகை, மே 10-

நாகை - இலங்கை பயணிகள் கப்பல் நடுக்கடலில் பழுதாகி நின்ற நிலையில் சுமார் 7 மணி நேரமாக உணவின்றி தவித்த 141 பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

நடுக்கடலில் கப்பல் பழுதானதால் உணவு, குடிநீரின்றி தவித்த 141 பயணிகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது.

தகவல் அறிந்து வந்த மீனவர்கள் மீட்புப் படகுகள் மூலம் பயணிகள் கப்பலை துறைமுகத்துக்கு இழுத்து வந்தனர். மீட்கப்பட்ட 141 பயணிகளுக்கும் நாகை துறைமுகத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

### போர் முடிவுக்கு வருமா..?

# அமைதி ஒப்பந்தம் தொடர்பாக ஈரானிடம் இருந்து விரைவில் பதில் வரும்!

## அமெரிக்க அதிபர் டிரம்ப் நம்பிக்கை!

வாஷிங்டன், மே 10-

ஈரான் - அமெரிக்கா இடையே முதல்கட்ட அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. 2வது கட்ட பேச்சுவார்த்தை திடீரென ரத்து செய்யப்பட்டது.

போரை முடிவுக்கு கொண்டுவர மத்தியஸ்த நாடான பாகிஸ்தான் மூலமாக ஈரானுக்கு ஒரு அமைதி திட்டத்தை அமெரிக்கா கொடுத்து அனுப்பியது. அந்த திட்டத்தை ஆய்வு செய்து வருவதாக ஈரான் தெரிவித்தது.

இதற்கிடையே, 3 அமெரிக்க கடற்படை கப்பல்கள், ஹார்முஸ் நீரிணையை வெற்றிகரமாக கடந்தன. அப்போது நடத்தப்பட்ட ஈரான் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்தன. ஈரான் ராணுவ தளங்கள் மீது பதிலடி தாக்குதல் நடத்தின. இதற்கிடையே, ஜனாதிபதி டிரம்ப் ஒரு நிருபருக்கு தொலைபேசி மூலம் பேட்டி அளித்தார். அதில், "அமெரிக்கா-ஈரான் கடற்படைகள் இடையிலான மோதல் ஒரு அன்பான சண்டைதான். போர் நிறுத்தம் இன்னும் நீடிக்கிறது.

அமைதி ஒப்பந்தம் எந்த நாளிலும் வரலாம். ஈரான் புரிந்து கொள்ள வேண்டும். அமைதி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திடாவிட்டால், அந் நாடு இன்னும் அதிகமாக வேதனைப்பட வேண்டி இருக்கும்" என்று கூறினார்.

இந்நிலையில் ஈரானுடனான அமைதி பேச்சுவார்த்தை தொடர்பாக நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய டிரம்ப், அவர்களிடமிருந்து (ஈரான்) இன்று இரவுக்குள் பதில் வரும் என எதிர்பார்க்கிறோம் என்று கூறினார். ஈரான் வேண்டுமென்றே அமைதி பேச்சுவார்த்தையை தாமதப்படுத்துவதாக நம்புகிறீர்களா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த டிரம்ப், "விரைவில் தெரிந்துவிடும்" என்று கூறினார்.

# 10 லட்சம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க ஏ.ஐ. எழுத்தறிவுத் திட்டம்!

புதுடெல்லி, மே 10-

பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் ஏ.ஐ . எழுத்தறிவு திட்டத்தை ஒன்றிய அரசு அறிமுகம் செய்துள்ளது. ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில், "ஆசிரியர்களுக்கான ஏ.ஐ. எழுத்தறிவு திட்டம் எனப்படும் இந்த முன்னெடுப்பு இந்திய தொழில்நுட்பக் கழகம் சென்னையில் உருவாக்கப்பட்ட கல்விக்கான ஏ.ஐ. சிறப்பு மையமான போதன் ஏ.ஐ. அமைப்பால் செயல்படுத்தப்பட உள்ளது.

ஆசிரியர்களின் பணிச்சுமையை குறைப்பதையும், கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதையும் குறிக்கோளாக கொண்டு, பாடம் திட்டமிடல், உள்ளடக்க உருவாக்கம், மதிப்பீடுகள் மற்றும் மாணவர் கருத்து பரிமாற்ற அமைப்புகள் உள்ளிட்ட வழக்கமான கற்பித்தல் நடைமுறைகளில் ஏ.ஐ.யை ஒருங்கிணைப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

2027ம் ஆண்டிற்குள் அன்றாட வகுப்பறை கற்பித்தலில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்து பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



நெல்லை மாநகராட்சி மகளிர் மேல்நிலை பள்ளியில் 12 ம் வகுப்பு பொதுத் தேர்வில் நெல்லை கல்வி மாவட்டத்தில் மாநகராட்சி பள்ளியில் பயின்ற சக்தி ஹரிணி வணிக கணிதம் பாடத்தில் 587 மதிப்பெண் பெற்று முதல் இடத்திலும்,ஜெயஸ்ரீ வணிக கணிதத்தில் 582 மதிப்பெண் பெற்று 2 ம் இடத்தையும்,அன்பரசி கணினி பாடத்தில் 574 மதிப்பெண் பெற்று 3 ம் இடத்தையும் பெற்றுள்ளனர்.இவர்களை நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் நேரில் சென்று மாணவிகளை பாராட்டி சால்வை அணிவித்து மாணவிகளுக்கு சன்மானம் வழங்கினார்.நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் கன்னியம்மாள்,உதவி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.